# புதுமைத் தமிழ் வாசகம்

426

REGISTRAR OF BOOKS
21 AUG 1958
MADRAS

இரண்டாம் வகுப்பிற்குரியது

426/3-58

ஆசிரியர் :
வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை

M & G Process Trichy

. கோபால் பிள்ளை
பதிப்பாளர்
...க்குளம் ...ராப்பள்ளி | 2/27, பிராட்வே சென்னை-1

TB
031(2)
N58
140523

# புதுமைத் தமிழ் வாசகம்

## இரண்டாம் வகுப்பிற் குரியது

(புதிய பாட திட்டத்தை ஒட்டி எழுதப்பட்டுள்ளது)

[Paper used : 24 lbs. White Printing]

ஆசிரியர் :
வித்வான் ம. பெரியசாமிப் பிள்ளை
முன்னைய தலைமைத் தமிழாசிரியர், E. R. உயர்நிலைப்பள்ளி,
திருச்சிராப்பள்ளி.

OF THE REGISTRAR OF BOOKS
21 AUG 1958
MADRAS

T. G. கோபால் பிள்ளை
பதிப்பாளர்

தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி

2/27, பிராட்வே
ஜி. டி. சென்னை

பதிப்புரிமை] 1958 [விலை 45 ந.பை.

முதற் பதிப்பு—பிப்ரவரி, 1958
இரண்டாம் பதிப்பு—ஜூன், 1958

தமிழ்த் ... ஆராய்ச்சி நூலகம் ★ சென்னை-600 008.
146523

APPROVED FOR CLASS USE
BY THE MADRAS TEXT-BOOK COMMITTEE
[Supplement to Part-I-B of the
Fort St. George Gazette dated 28-5-1958, Page 3]

TB
031(2)
N58

Kabeer Printing Works, Madras (3818)

# முன்னுரை

இப் புதுமைத் தமிழ் வாசக வரிசை, புதுவதாக அரசியலாரால் அமைத்து 25-12-1957-ல் வெளியிடப்பெற்ற பாடதிட்டத்திற்கிணங்க எழுதப்பட்டது. இவ்வரிசையில் இப்புத்தகம் **இரண்டாம் வகுப்பிற்கென** அமைந்த தாகும்.

இதனில், மொழிப் பயிற்சிக்கேற்பச் சிறு சிறு சொற் களும் வாக்கியங்களும் கொண்ட பாடங்களும், நீதி புகட் டும் கதைகள், நல்ல பழக்க வழக்கங்கள் முதலியவை பற் றிய பாடங்களும், பாப்பாப் பாட்டு, நிலாப் பாட்டு முதலிய பாடங்களும், இறுதியில் உலகநீதி, கொன்றைவேந்தன் ஆகிய செய்யுட் பாடங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

எனவே, இனிய எளிய நடையில் அமைந்த இப் புத்தகம் இளைஞர்களின் தாய்மொழி வளர்ச்சிக்கும் பயிற்சிக்கும் பெரிதும் உதவுமென்பது எனது நம்பிக்கை.

ம. பெரியசாமிப் பிள்ளை,
ஆசிரியர்.

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | திசைகள் | ... | 1 |
| 2. | காலைப்பாட்டு | ... | 4 |
| 3. | காக்கையும் நரியும் | ... | 5 |
| 4. | வாரமும் மாதமும் | ... | 7 |
| 5. | வாலிழந்த நரி | ... | 10 |
| 6. | பாப்பாப் பாட்டு | ... | 13 |
| 7. | புருவும் எறும்பும் | ... | 14 |
| 8. | பிராணிகளிடம் பாரதியாரின் அன்பு | ... | 17 |
| 9. | வேலையில் சோம்பல் கூடாது | ... | 21 |
| 10. | சூரியனும் சந்திரனும் | ... | 24 |
| 11. | நிலாப்பாட்டு | ... | 27 |
| 12. | தன் வலிமை அறியாத காக்கை | ... | 28 |
| 13. | நீ எப்படி இருப்பாய்? | ... | 31 |
| 14. | பேச்சினுல் உயிரிழந்த ஆமை | ... | 34 |
| 15. | பொருள்களை வீணுக்காதே | ... | 37 |
| 16. | பேராசையால் விளைந்த கேடு | ... | 40 |
| 17. | விளையாட்டும் உடல் நலமும் | ... | 41 |
| 18. | கோழி | ... | 44 |
| 19. | பிறரை ஏமாற்ருதே | ... | 45 |
| 20. | பள்ளிக்கூடத் தோட்டம் | ... | 48 |

பக்கம்

21. காகம் பாம்பைக் கொன்ற கதை ... 51
22. கந்தன் வளர்த்த வாத்து ... 54
23. ஔவையார் நெல்லிக்கனி பெற்றது ... 55
24. மளிகைக் கடை ... 59
25. உண்மையால் விளைந்த நன்மை ... 62
26. பூனைக்கு மணி கட்டுவது யார்? ... 65
27. மழைப் பாட்டு ... 66
28. நெற் பயிர் ... 67
29. நியூட்டனின் பொறுமை ... 71
30. தெனாலிராமன் ... 74
31. உலகநீதி ... 77
32. கொன்றைவேந்தன் ... 79

# தேசீய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
    பாரத பாக்ய விதாதா,

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
    த்ராவிட உத்கல வங்கா,

விந்த்ய ஹிமாசல யமுனு கங்கா
    உச்சல ஜலதி தரங்கா,

தவசுப நாமே ஜாகே,
    தவசுப ஆசிஷ மாங்கே

காயே தவ ஜய காதா,

ஜன கண மங்கள தாயக ஜயஹே
    பாரத பாக்ய விதாதா,

ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
    ஜய ஜய ஜய, ஜயஹே!

# தேசீய கீதத்தின் பொருள்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி
செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில்
கலக்கிறது;

இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.

அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப்
பாடுகின்றன;

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு

**வெற்றி, வெற்றி, வெற்றி.**




# 1. திசைகள்

**ஆசிரியர் :** ரமணி! உன் வீட்டிலிருந்து இந்தப் பள்ளிக்கூடம் எந்தத் திசையிலிருக்கிறது?

**ரமணி :** திசை என்றால் என்ன ஐயா?

**ஆசிரியர் :** திசை என்றால் தெரியாதா? கந்தா, உனக்குத் தெரியுமா?

**கந்தன் :** திசை என்பது பக்கம்.

**ஆசிரியர் :** திசையைப் பக்கம் என்று சொல்லலாம். பாலா, நான்கு திசைகளின் பெயர்கள் என்ன ?

**பாலன் :** கிழக்கு, மேற்கு, தெற்கு, வடக்கு.

**ஆசிரியர் :** சரி. உன் வீட்டிலிருந்து பள்ளிக்கூடம் எந்தத் திசையில் இருக்கிறது?

**பாலன் :** கிழக்கே இருக்கிறது.

**ஆசிரியர் :** சரி. ஒரு புதிய இடத்துக்குப் போனுல் அங்கே திசைகளை எப்படித் தெரிந்து கொள்வாய் ?

**பாலன் :** தெரியாது, ஐயா !

**ஆசிரியர் :** நான் சொல்கிறேன், கவனித்துக் கேள். காலையில் சூரியன் தோன்றும் போது, சூரியனைப் பார்த்து நில். உன் முன் பக்கம் கிழக்கு; பின் பக்கம் மேற்கு. உன் வலக்கைப் பக்கம் தெற்கு ; இடக்கைப் பக்கம் வடக்கு.

**ரமணி :** இந்த வழி எளிதாக இருக்கிறதே ! இனிமேல் எனக்குத் திசை கண்டு பிடிக்கத் தெரியும்.

**ஆசிரியர் :** ரமணி, சூரியன் மாலையில் எத்திசையில் மறைகிறது ?

**ரமணி :** மேற்கே, ஐயா !

**ஆசிரியர் :** பள்ளிக்கூடத்திலிருந்து உன் வீடு எந்தத் திசையில் இருக்கிறது ?

**ரமணி :** வடக்கே, ஐயா !

**ஆசிரியர் :** சரியாகச் சொல்லி விட்டாய். நாளைக்கு நான் திசைகளைப் பற்றிக் கேட்பேன். எல்லாரும் தவறில்லாமல் விடை சொல்ல வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| திசை | விடை | கேள் | கிழக்கு |
| தெற்கு | வடக்கு | முன் | காலை |
| எப்படி | கவனித்து | எளிதாக | பக்கம் |
| மாலை | தோன்றும் | இடம் | புதிய |
| வலம் | மறைகிறது | மேற்கு | பின் |
| இனிமேல் | கண்டுபிடி | தவறு | |

**பயிற்சி**

1. திசைகள் எத்தனை ? அவற்றின் பெயர் என்ன ?
2. சூரியன் தோன்றும் திசை என்ன ? மறையும் திசை என்ன ?
3. கோடிட்ட இடங்களில் சரியான சொற்களை எழுது :

நீ மேற்கே பார்த்து நின்றால் உன் வலக்கைப் பக்கம் ——; உன் இடக்கைப் பக்கம் ——; உன் பின் பக்கம் ——.

# 2. காலைப் பாட்டு



பொழுது விடிந்தது
  பொற்கோழி கூவிற்று
பூஞ்செடி
  பொலிவதைப் பாராய்
பொன்னே நீ
  எழுந்தோடி வாராய். 1

காகம் கரைந்தது
  காலையும் ஆயிற்று
கனியுதிர் காவினைப்
  பாராய்
கண்ணே நீ
  எழுந்தோடி வாராய். 2

—தேசிக விநாயகம் பிள்ளை



# 3. காக்கையும் நரியும்

ஒரு சிறுவன் ஒரு கடையில் இரண்டு வடைகள் வாங்கினுன். ஒரு வடையைத் தின்று கொண்டே அவன் ஓடினுன். மற்ருெரு வடையை இடக்கையில் வைத்திருந்தான். ஒரு மரக் கிளையில் உட்கார்ந்திருந்த காக்கை இதைப் பார்த்தது. அது திடீரென்று பின் புறமாகப் பறந்து வந்து, சிறுவன் கையி லிருந்த வடையைத் தன் அலகினுல் கௌவிச் சென்றது.

காக்கை வடையைக் கௌவிக் கொண்டு ஒரு மரக் கிளையில் அமர்ந்தது. தூரத்தில்

சென்று கொண்டிருந்த நரி இதைப் பார்த்து விட்டு, மரத்தின்கீழ் வந்தது. நரி காகத்தைப் பார்த்து, "காக்கையே! உன் அழகு வேறு எந்தப் பறவைக்கும் இல்லை. உன் குரல் எவ்வளவு இனிமையா யிருக்கிறது என்பதை அறிய ஆசைப்படுகிறேன். நீ ஒரு பாட்டுப் பாடுவாயோ?" என்று கேட்டது.

நரியின் பேச்சைக் கேட்ட காகம் கர்வம் கொண்டது. உடனே தன் அலகைத் திறந்து "கா! கா!" என்று கத்தியது. வடை கீழே விழுந்தது. உடனே நரி வடையைக் கௌவிக் கொண்டு ஓடிவிட்டது.

| | | | |
|---|---|---|---|
| அலகு | வேறு | கௌவி | இனிமை |
| குரல் | கர்வம் | ஆசைப்படு | பின்புறம் |
| திடீரென்று | | | |

### பயிற்சி

1. படங்களை வரிசையாகப் பார்த்துக் கொண்டே கதையைப் படி.
2. காக்கை எப்படி வடையைப் பெற்றது?
3. நரி காக்கையிடம் என்ன கூறியது?
4. காக்கை ஏன் ஏமாறியது?
5. இந்தக் கதையை நரி சொல்வதுபோல் சொல்லு.

## 4. வாரமும் மாதமும்

**ஆசிரியர் :** ரமணி, இன்று என்ன கிழமை ?

**ரமணி :** ஐயா, இன்று திங்கட்கிழமை.

**ஆசிரியர் :** கந்தா ! நேற்று என்ன கிழமை ?

**கந்தன் :** நேற்று ஞாயிற்றுக் கிழமை, ஐயா !

**ஆசிரியர் :** பாலா, உனக்குக் கிழமைகள் எல்லாம் தெரியுமா ? தெரிந்தால் சொல்.

**பாலன் :** கிழமைகள் ஏழு. அவை, ஞாயிறு, திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி.

**ஆசிரியர் :** சனிக்கிழமைக்கு அடுத்த நாள் என்ன கிழமை, பாலா ?

**பாலன் :** ஞாயிற்றுக் கிழமை, ஐயா !

**ஆசிரியர் :** இந்த ஏழு கிழமைகளும் சேர்ந்த காலத்திற்கு என்ன பெயர், கந்தா ?

**கந்தன் :** ஒரு வாரம் என்று பெயர், ஐயா !

**ஆசிரியர் :** சரியாகச் சொன்னாய். ரமணி, ஒரு வாரத்தில் எல்லாக் கிழமைகளிலும் நீ பள்ளிக்கு வருகிறாயா ?

**ரமணி :** இல்லை, ஐயா ! ஞாயிறு அன்று எங்களுக்கு முழுநாள் விடுமுறை. சனிக்கிழமை, காலையில் மட்டும் பள்ளிக்கூடம் உண்டு.

**ஆசிரியர் :** கந்தா, இது என்ன மாதம்?

**கந்தன் :** இது ஆனி மாதம், ஐயா !

**ஆசிரியர் :** மாதங்கள் எத்தனை ?

**கந்தன் :** தெரியாது, ஐயா !

**ஆசிரியர் :** பாலா, நீ சொல்லு.

**பாலன் :** மாதங்கள் பன்னிரண்டு. அவை, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி, தை, மாசி, பங்குனி.

**ஆசிரியர் :** சரி. ஒரு மாதத்திற்கு முப்பது நாட்கள். பன்னிரண்டு மாதங்கள் சேர்ந்து ஓர் ஆண்டு அல்லது வருடம் எனப்படும். கந்தா, நாளை நீ இந்தப் பன்னிரண்டு மாதங்களையும் சொல்ல வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| கிழமை | இன்று | நேற்று | தை |
| எல்லாம் | தெரியும் | தெரியாது | நாளை |
| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | சொல்லு |
| வியாழன் | வெள்ளி | சனி | புதன் |
| காலம் | பெயர் | வாரம் | அடுத்த |
| உண்டு | மாதம் | சித்திரை | இல்லை |
| ஆனி | ஆடி | ஆவணி | வைகாசி |
| ஐப்பசி | பங்குனி | மார்கழி | வருடம் |
| மாசி | கார்த்திகை | ஆண்டு | புரட்டாசி |
| உனக்கு | | | |

## பயிற்சி

1. உங்கள் பள்ளிக்கூடத்திற்கு எந்தக் கிழமைகளில் விடுமுறை ?

2. ஒரு மாதத்தில் எத்தனை முழு வாரங்கள் உள்ளன ?

3. பொருத்தமாகச் சேர்த்துப் படி :—

| | |
|---|---|
| 1. வாரத்தின் முதல் நாள் | வாரம் |
| 2. ஏழு நாட்கள் கொண்டது | ஞாயிறு |
| 3. வாரத்தின் கடைசி நாள் | புதன் |
| 4. வாரத்தின் நடு நாள் | சனி |




## 5. வாலிழந்த நரி

ஒரு நாள் இரவில் ஒரு நரி, இரை தேடுவதற்காகப் புறப்பட்டுப் பல இடங்களில் சுற்றியது. கடைசியில் அது ஒரு கோழிப் பண்ணையைக் கண்டது. அதில் புகுந்து ஒரு கோழியைத் திருடிச் செல்ல முயற்சி செய்தது.

பண்ணையின் சொந்தக்காரர் அங்கே ஒரு பொறி அமைத்திருந்தார். நரியின் வால் பொறியில் சிக்கிக் கொண்டது. நரி விசையுடன் வாலை இழுத்தது. வால் அறுந்து விட்டது. வால் போனாலும் உயிர் தப்பியதற்கு மகிழ்ச்சியடைந்த நரி காட்டுக்குள் ஓடி

விட்டது. மற்ற நரிகளுக்கு எதிரே செல்ல அது வெட்கப்பட்டு, ஒரு புதரில் மறைந்து வாழ்ந்தது.

நாளடைவில், வாலறுந்த இடத்துப் புண் ஆறிவிட்டது. இப்பொழுது அந்த நரி, பிற நரிகளுடன் பழக முன் வந்தது. மற்ற நரிகள், வாலிழந்த நரியைப் பார்த்து வியப் படைந்தன. உடனே வாலிழந்த நரி, “வாலில் லாமல் இருப்பது எவ்வளவு வசதியாயிருக் கிறது, தெரியுமா? அது ஒரு பெருஞ்சுமை; அழகுமில்லை. நீங்களும் என்னைப்போல் வாலை அறுத்துவிட்டுக் கொண்டு பாருங்கள்,” என்றது.

இதைக் கேட்ட சில வாலிப நரிகள், தாமும் வாலை அறுத்துக் கொள்ளலா மென்று நினைத்தன. ஆனால் அந்தக் கூட்டத்தில் இருந்த ஒரு முதிய நரி, “வால் இருப்பது தான் எங்களுக்கு அழகாயும் வசதியாயும் இருக்கிறது. வாலில்லாவிட்டால் ஏற்படும் அழகும் வசதியும் உனக்கே இருக்கட்டும். நாங்கள் யாரும் உன்னைப் பின்பற்றத் தயாரா யில்லை,” என்றது.

| | | | |
|---|---|---|---|
| வசதி | புறப்படு | புதர் | தேடுவதற்கு |
| சுமை | பண்ணே | புண் | தப்பியது |
| வாலிப | அறுந்து | பொறி | வெட்கப்படு |
| முதிய | புகுந்து | சிக்கிக்கொள் | ஆறிவிட்டது |
| பின்பற்று | முயற்சி | விசையுடன் | சொந்தக்காரர் |
| வியப்படை | தயார் | | |

## பயிற்சி

1. நரியின் வால் ஏன் அறுந்து போயிற்று ?
2. வாலிழந்த நரி ஏன் சில நாட்கள் மறைந்து வாழ்ந்தது ?
3. வாலிழந்த நரி, பிற நரிகளிடம் என்ன சொல்லிற்று ?
4. கிழநரி என்ன பதில் கூறியது ?
5. தெரிந்து கொள் : வாலிப X முதிய.
6. **காலியாயுள்ள இடங்களில், கொடுத்திருக்கும் சொற்களைத் தக்கபடி மாற்றி அமை :**

(அ) நரியின் வால் பொறியில் ———. (சிக்கு)

(ஆ) சொந்தக்காரர் ஒரு பொறி ———. (அமை)



# 6. பாப்பாப் பாட்டு

ஓடி விளையாடு பாப்பா—நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா !
கூடி விளையாடு பாப்பா—ஒரு
குழந்தையை வையாதே பாப்பா !

காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு !
மாலை முழுதும் விளையாட்டு—என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு பாப்பா !

பொய் சொல்லக் கூடாது பாப்பா—என்றும்
புறஞ் சொல்லல் ஆகாது பாப்பா !
தெய்வம் நமக்குத் துணை பாப்பா—ஒரு
தீங்குவர மாட்டாது பாப்பா !

—பாரதியார்





# 7. புருவும் எறும்பும்

ஒரு வாய்க்கால் கரையில் ஒரு மரம் இருந்தது. அந்த மரத்தில் ஒரு புரு வாழ்ந்தது. ஒரு நாள் மரத்தில் இருந்த ஓர் எறும்பு வாய்க்காலில் விழுந்து விட்டது. அது நீரில் தத்தளித்தது. புரு இதைப் பார்த்தது.

எறும்புக்கு உதவி செய்யப் புரு எண்ணியது. உடனே அது ஓர் உலர்ந்த குச்சியை எடுத்து நீரில் போட்டது. குச்சி எறும்பின் அருகே நீரில் மிதந்தது. உடனே எறும்பு அதன்மேல் ஏறிக் கொண்டது. குச்சி கரையில் ஒதுங்கிற்று. எறும்பு கரையேறி உயிர் தப்பியது.

சிறிது நேரத்தில் அங்கே ஒரு வேடன் வந்தான். மரத்தின் மீது இருந்த புருவைக் கண்டான். உடனே அவன் தன் வில்லை எடுத்தான். அதில் அம்பை வைத்துப் புருவை நோக்கிக் குறி பார்த்தான். புரு வேடனைக் கவனிக்க வில்லை.

நீரிலிருந்து தப்பிய எறும்பு வேடனைக் கண்டது. புருவைக் காப்பாற்ற எண்ணியது. உடனே அது வேடனின் காலில் சுரீரென்று கடித்தது.

வலி பொறுக்க முடியாமல் வேடன் 'ஆ!' என்று கத்தினான். அவன் வைத்த குறி தவறி விட்டது. வேடனின் கூக்குரலைக் கேட்ட புரு பறந்து போய்விட்டது.

புரு எறும்பைக் காப்பாற்றியது; எறும்பும் புருவைக் காத்தது.

| | | |
|---|---|---|
| குறி | தப்பியது | தவறி |
| வில் | வாய்க்கால் | கடித்தது |
| கரை | மிதந்தது | விழுந்து |
| குச்சி | பொறுக்க | கூக்குரல் |
| உலர்ந்த | தத்தளித்தது | வாழ்ந்தது |
| அருகே | ஒதுங்கிற்று | சுரீரென்று |

## பயிற்சி

1. எறும்பு ஏன் தத்தளித்தது?
2. புரு எறும்பை எப்படிக் காப்பாற்றியது?
3. எறும்பு புருவை எப்படிக் காப்பாற்றியது?
4. பொருத்தமாகச் சேர்த்துப் படி:

| | |
|---|---|
| (அ) எறும்பு | பறந்து போய்விட்டது. |
| (ஆ) வேடன் | கரையேறி உயிர் தப்பியது. |
| (இ) புரு | வைத்த குறி தவறி விட்டது. |

5. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை எழுது:

(அ) —— வேடன் காலில் கடித்தது.
(ஆ) —— குச்சியை ஒடித்துப் போட்டது.
(இ) —— வில்லில் அம்பை வைத்துக் குறிபார்த்தான்.



# 8. பிராணிகளிடம் பாரதியாரின் அன்பு

தற்காலத் தமிழ்ப் புலவர்களுள் சுப்பிரமணிய பாரதியார் தலை சிறந்தவர். அவர் இயற்றிய பாப்பாப் பாட்டை நீங்கள் படித்தீர்கள். இதைப் போன்ற வேறு பல பாடல்களையும் அவர் எழுதியுள்ளார்.

பாரதியார் சுமார் எழுபத்தைந்து ஆண்டு

களுக்கு முன் எட்டயபுரத்தில் பிறந்தவர். அவர் தம் தந்தையாரிடமே முதலில் தமிழ் கற்றுக் கொண்டார். பிறகு பள்ளியிலும் சேர்ந்து படித்தார்.

சிறு வயதிலேயே அழகிய பாடல்களை இயற்றும் ஆற்றல் பாரதியாரிடம் அமைந்திருந்தது. அதனாலேயே எட்டயபுரத்து அறிஞர்கள் அவருக்குப் 'பாரதி' என்ற பட்டப் பெயரைச் சூட்டினர். பாரதி என்றால் புலவன் என்று பொருள்.

எட்டயபுரத்து சமீன்தார் சிறந்த தமிழ் அறிஞர். தமிழ்ப் புலவர்களையும் வேறு கலைகளில் வல்லவர்களையும் அவர் ஆதரித்து வந்தார். பாரதியாரின் தந்தையாரான சின்னசாமி அய்யரும் சமீன்தாரினால் ஆதரிக்கப் பட்டவரே. அவர் அடிக்கடி பாரதியாரை அழைத்து அவர் இயற்றிய பாடல்களைப் பாடச் சொல்லிக் கேட்பது வழக்கம்.

பிற்காலத்தில் பாரதியார் நம் நாட்டு விடுதலைப்போரில் ஈடுபட்டுப் பல துன்பங்களை அனுபவித்தார். பல பத்திரிகைகளை நடத்தினர். வீர உணர்ச்சி ததும்பும் பாடல்களும் கட்டுரைகளும் அவற்றில் எழுதினர்.

பாரதியாருக்குக் காக்கை, குருவி, ஆடு, மாடு போன்ற பிராணிகளிடத்து அதிக அன்பு உண்டு. தம் கையிலுள்ள உணவை எதிரேயுள்ள காக்கை குருவிகளுக்கும் பகிர்ந்து கொடுத்துத் தாமும் புசிப்பார்.

அவர் தம் கடைசிக் காலத்தில் திருவல்லிக் கேணியில் வாழ்ந்து வந்தார். நாள்தோறும் பார்த்தசாரதி கோவிலுக்குச் சென்று கடவுளை வணங்கிவிட்டு வருவது வழக்கம். அப்பொழுது தேங்காயும் பழமும் வாங்கி, அந்தக் கோவில் யானைக்குக் கொடுப்பார். ஒரு நாள் யானைக்கு மதம் பிடித்திருந்தது. அன்றும் தேங்காய் பழம் வாங்கி யானைக்குக் கொடுக்கச் சென்றார். கூடியிருந்தவர்கள் தடுத்தும் அவர் கேட்கவில்லை.

மதம்பிடித்த யானை தன் கொம்பினால் பாரதியாரைத் தாக்கிக் கீழே தள்ளிவிட்டது. அவருக்குப் பலமான காயம் ஏற்பட்டது. ஒரு நண்பர் அவரைத் தூக்கிச் சென்று வீட்டில் கிடத்தினார். அன்று முதல் பாரதியார் படுத்த படுக்கையாகவே இருந்தார். சில மாதங்களில் இவ்வுலகைத் துறந்தார்.

பாரதியாரின் பாடல்களை நீங்கள் படிக்க

வேண்டும். அவற்றைப் படித்தால் உங்கள் அறிவு பெருகும்; உங்களுக்கு நாட்டுப்பற்று உண்டாகும்.

| | | | |
|---|---|---|---|
| இயற்றிய | பாரதி | துன்பம் | கட்டுரை |
| ஆற்றல் | கலை | அனுபவி | பகிர்ந்து |
| அறிஞர் | ஆதரி | பத்திரிகை | மதம் |
| கிடந்து | ஈடுபட்டு | உணர்ச்சி | தடுத்து |
| அமைந்திரு | துறந்தார் | ததும்பும் | தாக்கி |
| தலைசிறந்தவர் | வல்லவன் | பெருகும் | |

## பயிற்சி

1. பாரதியாருக்கு அப்பெயர் எப்படி ஏற்பட்டது?
2. பாரதியாரை ஆதரித்தவர் யார்?
3. நம் நாட்டு விடுதலைப் போரில் அவர் எப்படி ஈடுபட்டார்?
4. பிராணிகளிடம் பாரதியாருக்கு அன்பு இருந்தது எப்படித் தெரியவந்தது?
5. பாரதியார் மரணமடைந்ததற்கு எது காரணமாயிற்று?
6. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை அமைத்து எழுது:
   (அ) பாரதியாருக்குப் பிராணிகளிடம் ——— இருந்தது.
   (ஆ) பாரதியாரின் பாடல்களைப் படித்தால் ——— பெருகும்; ——— உண்டாகும்.
7. **தவறுகளைத் திருத்தி எழுது:**
   (அ) பரவைகளிடம் பாரதியார் அன்பு கொண்டார்.
   (ஆ) பாரதியாரின் பாடல்கலைப் படித்தால் அரிவு பெறுகும்.



## 9. வேலையில் சோம்பல் கூடாது

ஒரு வணிகனிடம் ஒரு கழுதை இருந்தது. அவன் அதற்கு நல்ல தீனி கொடுத்து வளர்த்தான். வெல்லம், உப்பு முதலிய சரக்கு மூட்டைகளை அதன்மேல் ஏற்றிச் சந்தைக்கு அதை ஓட்டிச் செல்வான். சந்தையில் சரக்குகளை விற்றுவிட்டுத் திரும்புவான்.

ஆனால், அந்தக் கழுதைக்குப் பொதி சுமப்பதில் விருப்பமில்லை. வணிகன் அடிப்பானே என்று பயந்துதான் அது பொதி சுமந்தது. அதற்குச் சோம்பல் அதிகம்.

ஒரு நாள் உப்பு மூட்டைகளைக் கழுதையின்மேல் ஏற்றிக்கொண்டு வணிகன் சந்தைக்

குச் சென்றான். வழியில், ஆழமில்லாத ஒரு நீரோடை இருந்தது. அதில் இறங்கிச் சென்ற பொழுது கழுதை கால் தடுக்கி நீரில் விழுந்து விட்டது. சிறிது நேரம் அது நீரிலேயே இருந்துவிட்டு மெல்ல எழுந்தது.

இதற்குள் உப்பெல்லாம் நீரில் கரைந்து போய்விட்டது. கழுதை தன் முதுகில் பளு இல்லாததை உணர்ந்து மகிழ்ச்சியடைந்தது.

மற்றொரு நாள் வெல்ல மூட்டைகளைச் சுமந்து கொண்டு கழுதை சந்தைக்குச் சென்றது. அன்று அது தானாகவே நீரில் விழுந்து விட்டு வெகு நேரம் கழித்து எழுந்தது. வெல்லமும் நீரில் கரைந்து போய்விட்டது. கழுதை மகிழ்ச்சியுடன் எழுந்தது.

கழுதையின் உபாயத்தை வணிகன் தெரிந்துகொண்டான். அதற்கு நல்ல படிப்பினை கற்பிக்க விரும்பினான். மறுநாள் ஒரு வைக்கோல் கட்டை அதன்மேல் ஏற்றிக் கொண்டு சந்தைக்குச் சென்றான்.

வைக்கோல் கட்டு பளுவாயில்லை. ஆனாலும், கழுதை நீரோடையில் தானாகவே விழுந்தது. வெகு நேரம் கழித்து எழுந்தது. நீரில் ஊறிய வைக்கோல் மிக்க பளுவாகிவிட்டது.

கழுதையின் உபாயம் இப்பொழுது 'பலிக்க வில்லை. அது வருந்திக் கொண்டே சந்தைக் குச் சென்றது.

| | | | |
|---|---|---|---|
| தீனி | சந்தை | தடுக்கி | கற்பி |
| உப்பு | ஒட்டு | கரைந்து | கழித்து |
| சரக்கு | திரும்பு | பளு | ஊறிய |
| பலிக்க | பொதி | உணர் | படிப்பினை |
| வணிகன் | நீரோடை | உபாயம் | வைக்கோல் |
| வெல்லம் | | | |

### பயிற்சி

1. கழுதைக்கு என்ன செய்ய விருப்பமில்லை?

2. கழுதை நீரில் விழுந்தபொழுது உப்பு மூட்டை என்ன ஆயிற்று?

3. நீரில் விழுந்த வைக்கோல் கட்டு என்ன ஆயிற்று?

4. கோடிட்ட இடங்களைத் தக்க சொற்களால் நிரப்பு :—

(அ) கழுதைக்கு —— அதிகம்.
(ஆ) உப்பு நீரில் ——.
(இ) வெல்லம் நீரில் ——.
(ஈ) வைக்கேல் நீரில் ——.

5. தெரிந்து கொள் :

வணிகன் = வியாபாரி. தீனி = உணவு.
சரக்கு = சாமான். உபாயம் = தந்திரம்.

6. இந்தச் சொற்களை உபயோகித்து ஒவ்வொரு வாக்கியம் சொல்லு.



# 10. சூரியனும் சந்திரனும்

**ஆசிரியர் :** பாலா, நீ பகலில் பள்ளிக்கு வருகிறாயா, இரவில் வருகிறாயா?

**பாலன் :** பகலில் வருகிறேன்.

**ஆசிரியர் :** பகல் என்பது என்ன?

**பாலன் :** சூரியன் வானத்தில் தெரியும் காலத்தைப் பகல் என்கிறோம்.

**ஆசிரியர் :** ரமணி, சூரியன் எப்பொழுது தோன்றும்; எப்பொழுது மறையும்?

**ரமணி :** சூரியன் காலையில் தோன்றும்; மாலையில் மறையும்.

**ஆசிரியர் :** இரவு என்பது என்ன?

**ரமணி :** சூரியன் வானத்தில் இல்லாத காலத்தை இரவு என்கிறோம்.

**ஆசிரியர் :** பார்ப்பதற்குச் சூரியன் எப்படி இருக்கிறது ?

**ரமணி :** சூரியன் ஒரு நெருப்புப் பந்து போல் தோன்றுகிறது.

**ஆசிரியர் :** கந்தா, சூரியன் வானத்தில் வருவதால் நமக்கு என்ன பயன் ?

**கந்தன் :** சூரியன் வானத்தில் வரும் பொழுது வெயில் காய்கிறது. நமக்கு வெளிச் சமும் வெப்பமும் கிடைக்கின்றன.

**ஆசிரியர் :** சூரியனைப் போல், இரவில் வெளிச்சம் கொடுப்பது எது ?

**கந்தன் :** இரவில் சந்திரன் வெளிச்சம் கொடுக்கிறது.

**ஆசிரியர் :** ரமணி, சூரியனையும் சந்தி ரனையும் ஒப்பிட்டுச் சொல்.

**ரமணி :** சந்திர வெளிச்சம் மங்கலாக இருக்கிறது. சந்திரன் வெப்பம் கொடுப்ப தில்லை.

**ஆசிரியர் :** பாலா, சந்திரனைப் பற்றி உனக்கு இன்னும் என்ன தெரியும் ?

**பாலன் :** சந்திரன் எல்லா நாட்களிலும் முழு வட்டமாக இல்லை.

**ஆசிரியர் :** சரி. இதையும் தெரிந்து கொள்ளுங்கள். மாதம் ஒரு நாள் சந்திரன் முழு வட்டமாக இருக்கும். அன்று பௌர்ணமி. மாதம் ஒரு நாள் சந்திரனை வானத்தில் பார்க்க முடியாது. அன்று அமாவாசை.

| | | | |
|---|---|---|---|
| பகல் | இரவு | நெருப்பு | வெயில் |
| மங்கல் | நமக்கு | பயன் | சந்திரன் |
| பார்ப்பதற்கு | வெளிச்சம் | வெப்பம் | முடியாது |
| காய்கிறது | இன்னும் | முழுவட்டம் | எப்பொழுது |
| அமாவாசை | | | |

## பயிற்சி

1. சூரியன் நமக்கு என்ன கொடுக்கிறது ?
2. சந்திரன் நமக்கு என்ன தருகிறது ?
3. பௌர்ணமி யன்று சந்திரன் எப்படித் தோன்றும் ?
4. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்துப் படி :

(அ) சூரியன் —— தோன்றும்.
(ஆ) சூரிய வெளிச்சம் உள்ள நேரம் ——.
(இ) அமாவாசையன்று சந்திரனைக் காண ——.
(ஈ) சந்திரன் —— வெளிச்சம் தரும்; சூரியன் —— வெளிச்சம் தரும்.



# 11. நிலாப் பாட்டு

1. வட்ட வடிவாயிருக்கும்
வெண்ணிலாவே—நீ
வாய்திறந்து பேசுவாயோ
வெண்ணிலாவே.

2. ஆகாயத்தில் ஓடுகின்ற
வெண்ணிலாவே—நீ
அசைந்தசைந்து போவதென்ன
வெண்ணிலாவே.

3. மேகத்தில் மறைந்து வரும்
வெண்ணிலாவே—நீ
விளையாட வருவாயோ
வெண்ணிலாவே.




# 12. தன் வலிமை அறியாத காக்கை

ஒரு பெரிய கழுகு வானத்தில் வட்ட மிட்டுக் கொண்டிருந்தது. கீழே ஒரு ஆட்டு மந்தை மேய்ந்து கொண்டிருந்தது. அந்த மந்தையில் ஒரு சிறு ஆட்டுக் குட்டி இருந்தது. கழுகு அந்தக் குட்டியைப்

பார்த்துவிட்டது. உடனே அது தாழ்ந்து பறந்து ஆட்டுக் குட்டியைத் தன் கால் நகங்களில் பற்றிக் கொண்டு மறுபடியும் மேலே பறந்தது. கழுகு வலிமையுள்ள பெரிய பறவை; ஆகவே அது எளிதில் ஆட்டுக் குட்டியைத் தூக்கிச் செல்ல முடிந்தது.

பக்கத்து மரத்தில் உட்கார்ந்திருந்த ஒரு காக்கை இதைப் பார்த்தது. அது தானும் ஓர் ஆட்டுக் குட்டியைத் தூக்கிச் செல்ல நினைத்தது. கழுகைப் போல் தனக்கும் வலிமையுண்டு என்று அது எண்ணியது.

காக்கை பறந்து வந்து ஒரு ஆட்டுக் குட்டியின் முதுகில் உட்கார்ந்தது. கால் நகங்களால் முதுகிலிருந்த உரோமத்தைப் பற்றிக்கொண்டு பறக்க முயற்சி செய்தது.

காக்கையினுல் ஆட்டுக் குட்டியைத் தூக்க முடியவில்லை. அதன் கால் நகங்கள் உரோமத்தில் சிக்கிக்கொண்டன. தன்னை விடுவித்துக் கொள்ள முடியாமல் காக்கை தவித்தது.

பக்கத்துக் குடிசையில் இருந்த குடியானவன் ஒருவன் இதைப் பார்த்தான். அவன்

வெளியே வந்து காக்கையின் கால்களை ஆட்டின் முதுகிலிருந்து விடுவித்தான்.

அவன் பிள்ளைகள் இருவர் இந்த வேடிக்கையைப் பார்க்க வந்துவிட்டனர். அவன், "ஐயோ, பாவம்! தன் வலிமை தெரியாத காக்கை இது! கழுகு செய்ததைப் போல் தானும் செய்ய இது எண்ணி விட்டது!" என்று கூறினன். பிறகு காக்கையைப் பறக்கவிட்டான். காக்கை மகிழ்ச்சியுடன் பறந்து சென்றது. அதைப் பார்த்த சிறுவரும் மகிழ்ந்தார்கள்.

| | | | |
|---|---|---|---|
| கழுகு | தாழ்ந்து | முடிந்தது | தவித்தது |
| வட்டமிடு | பற்றிக்கொள் | முதுகு | குடிசை |
| மந்தை | வலிமை | உரோமம் | விடுவித்துக்கொள் |
| மேய்ந்து | சிக்கிக்கொள் | எளிதில் | |

**பயிற்சி**

1. படத்தை வரிசையாகப் பார்த்துக் கொண்டே கதையைப் படியுங்கள்.
2. கழுகு என்ன செய்தது?
3. காக்கை என்ன செய்ய எண்ணியது?
4. ஆட்டு முதுகின் மேல் உட்கார்ந்த காக்கை ஏன் பறந்துசெல்ல முடியவில்லை?
5. குடியானவன் என்ன செய்தான்?
6. **எதிரான சொற்கள் கூறு :—**

   தாழ்ந்து, எளிதில், முடிந்தது.



## 13. நீ எப்படி இருப்பாய்?

கோபுவும் சீனுவும் நண்பர்கள். கோபு உடல் வலிமை உள்ளவன்; ஆரோக்கியம் உள்ளவன். சீனுவோ மெலிந்திருந்தான்; ஆரோக்கியமில்லாமல் இருந்தான்.

கோபு விளையாடுவதில் மிக்க ஆசை கொண்டவன். அவன் நாள்தோறும் மாலையில் விளையாடுவான். அவன் எப்போதும் குளிர்ந்த நீரிலேயே குளிப்பான். அவன் ஒருபோதும் அசுத்தமான தண்ணீரைக் குடிப்பதில்லை. சுத்தமான நீரையே குடிப்

பான். அவன் காலையில் ஒருபோதும் காப்பி குடிக்க மாட்டான். பாலைத்தான் பருகுவான்.

கோபு சுத்தமான, காற்றோட்டமான ஒரு வீட்டில் வசிக்கிறான். அவன் நடப்பான்; ஓடுவான்; குதிப்பான்; தினமும் மாலையில் பந்து ஆடுவான். அவ் விளையாட்டில் அவன் மிகவும் கெட்டிக்காரன். அவன் ஆரோக்கியத் துடன் இருக்கிறான். அவனுக்கு வலிமை யுள்ள உடல் அமைந்திருக்கிறது. அவன் மனமும் தெளிவாக இருக்கிறது. ஆதலால் அவன் பள்ளிக்கூடத்தில் மகிழ்ச்சியோடு இருக்கிறான். அவனுடைய உடல் நலமே அவனுக்குச் செல்வமாகும்.

சீனு வலிமையற்றவன். அவன் ஒரு போதும் விளையாட மாட்டான். எப்போதும் வெந்நீரிலேயே குளிப்பான். அவன் நாள் தோறும் காலையில் காப்பி குடிப்பான். சில சமயங்களில் தேநீரும் குடிப்பான். அவன் சுத்தமான வீட்டில் வசிக்கவில்லை. அவன் ஓடுவதில்லை; குதித்து விளையாடுவதும் இல்லை. அவன் உடல்நலம் இல்லாதிருக் கிறான். அவன் மிகவும் உழைத்துப் படிப் பான். வகுப்பில் மணிக்கணக்காக உட்

கார்ந்து பாடம் கேட்பான். பாடங்களை நன்ருகப் படிப்பான். ஆனுல் அவனிடம் உடல் நலம் இல்லையே! சில சமயங்களில் அவனுக்கு நோய்களும் வந்துவிடும்.

நீ எப்படி இருப்பாய்? கோபுவைப்போல் இருப்பாயா? சீனுவைப்போல் இருப்பாயா?

| | | | |
|---|---|---|---|
| நண்பர் | ஆசை | செல்வம் | வெந்நீர் |
| வலிமை | குளிர்ந்த | தெளிவு | தேநீர் |
| மெலிந்து | அசுத்தம் | காற்ருேட்டம் | உழைத்து |
| மிக்க | காப்பி | கெட்டிக்காரன் | நோய் |
| ஆரோக்கியம் | பருகு | | |

பயிற்சி

1. கோபு ஏன் ஆரோக்கியமுள்ளவனுக இருக்கிருன்?
2. சீனுவுக்கு ஏன் அடிக்கடி நோய் வந்துவிடுகிறது?
3. எதிரான பொருளுடைய சொற்களைத் தெரிந்து கொள் :

அசுத்தம் × சுத்தம்; வெந்நீர் × குளிர்நீர்
மெலிந்து × பருத்து.

4. **பின்வரும் வாக்கியங்களைப் பூர்த்தி செய் :**

(அ) காற்ருேட்டமான வீட்டில் வசிக்க ——.
(ஆ) சுத்தமான நீரையே ——.
(இ) மாணவர்கள் மாலையில் ——.
(ஈ) மாணவர்கள் காப்பி குடிக்க ——.



# 14. பேச்சினல் உயிரிழந்த ஆமை

ஒரு குளத்தில் ஓர் ஆமை வாழ்ந்து வந்தது. அதனுடன் இரு அன்னப் பறவைகள் நட்பாயிருந்தன. அவை மூன்றும் அடிக்கடி கூடிப் பேசிப் பொழுது போக்கும். எப்பொழுதும் நண்பர்களுடன் பேசிக் கொண்டிருப்பதில் ஆமைக்கு மிக்க விருப்பம் உண்டு.

கோடைக் காலத்தில் அந்தக் குளத்து நீர் வற்றி விட்டது. அன்னங்கள் வேறொரு குளத்திற்குச் செல்ல எண்ணின. அவை ஆமையிடம் தம் கருத்தைக் கூறின. ஆமை,

"என்னையும் உங்களுடன் அழைத்துச் செல்லுங்கள்," என்றது.

அன்னப் பறவைகள் சிறிது ஆலோசித்து விட்டு ஒரு கோலைக் கொண்டு வந்தன. அவை ஆமையிடம், "நண்பா! இந்தக் கோலின் நடுவை நீ உன் வாயினால் இறுகப் பற்றிக் கொள். நாங்கள் அதன் முனைகளைப் பற்றிக் கொண்டு பறந்து செல்கிறோம். ஆனால், நடு வழியில் பேசுவதற்காக நீ வாயைத் திறக்கக் கூடாது," என்று கூறின. ஆமை அதற்கு இசைந்தது.

அன்னங்கள் ஆமையைத் தூக்கிக் கொண்டு பறந்து சென்றன. ஓர் ஊரின் மேலே அவை பறந்த பொழுது, பலர் அவற்றை வியப்புடன் பார்த்தனர். சிலர், "இந்த வேடிக்கையைப் பாருங்கள்! செத்த ஆமையை இரு அன்னப் பறவைகள் தூக்கிச் செல்கின்றன," என்று கூவினார்கள்.

இதைக் கேட்ட ஆமைக்குச் சினம் பொங்கியது. தன்னை அவர்கள் 'செத்த ஆமை' என்று சொன்னது அதற்குப் பொறுக்கவில்லை. அவர்களுக்குப் பதில் கூற எண்ணி வாயைத் திறந்தது. உடனே

உயரத்திலிருந்து அது கீழே விழுந்து இறந்தது. தன் நிலைமையை மறந்து பேசியதால் அது உயிரிழந்தது.

| | | |
|---|---|---|
| அன்னம் | கோல் | வியப்பு |
| கருத்து | நடு | சினம் |
| அழைத்து | இறுக | மறந்து |
| ஆலோசி | இசைந்தது | பொங்கியது |
| வற்றிவிட்டது | பற்றிக்கொள் | பொறுக்கவில்லை |
| பொழுதுபோக்கு | | |

பயிற்சி :

1. அன்னப் பறவைகள் ஏன் வேறு குளத்துக்குப் போக எண்ணின ?

2. ஆமையைத் தூக்கிச் செல்ல அவை என்ன வழி கண்டுபிடித்தன ?

3. ஆமைக்கு ஏன் கோபம் வந்தது ?

4. கோடிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களைச் சேர்த்துப் படி :

(அ) குளத்தில் நீர் ——.

(ஆ) ஆமையும் வேறு குளத்துக்குச் செல்ல ——.

(இ) ஆமை கோலின் நடுவை இறுகப் ——.

(ஈ) அன்னப் பறவை வானில் ——; ஆமை நிலத்தில் ——.



## 15. பொருள்களை வீணாக்காதே

மகாத்மா காந்தியைப் பற்றி நீங்கள் கேள்விப் பட்டிருப்பீர்கள். அவரே நம் நாட்டுக்கு விடுதலை தேடித் தந்தவர். அவரே நம்மை வீரமக்களாகச் செய்தார். ஆகையால் அவரை நம் நாட்டுத் தந்தை என்கிறோம்.

எப்பொழுதும் உண்மையே பேச வேண்டுமென்றும், உண்மையாகவே நடக்க

வேண்டுமென்றும், நம் எதிரிகளிடத்தும் அன்பாயிருக்க வேண்டும் என்றும் அவர் நமக்குக் கற்பித்தார். அவ்வாறே எப்பொழுதும் அவர் நடந்து காட்டினுர். அவர் எளிய முறையில் வாழ்ந்தார். எந்தப் பொருளேயும் அவர் வீணுக்குவதில்லே. அற்பமான பொருள்களேயும் அவர் சேமித்து வைப்பார்; பிறகு பயன்படுத்துவார்.

ஒரு பக்கம் எழுதி, மறுபக்கம் எழுதாத காகிதத் துண்டுகளே அவர் குப்பையில் எறிந்துவிட மாட்டார். அவற்றைச் சேர்த்து வைத்து, பின்னுல் குறிப்புகள் எழுதப் பயன் படுத்துவார்.

ஒரு நாள் காந்தியார் எழுதுவதற்கு வைத்திருந்த பென்சில் தொலேந்து விட்டது. அது மிகவும் சிறிது. அவருடனிருந்தவர்களில் ஒருவர், ஒரு பெரிய பென்சிலேக் கொணர்ந்து அவரிடம் கொடுத்தார். காந்தியார் அதை வாங்கிக்கொள்ள மறுத்து விட்டார். தொலேந்துபோன பென்சிலேத் தேடினுர். உடனிருந்தவர்கள் எல்லோரும் தேடினுர்கள். மூலே முடுக்குகளில் எல்லாம் தேடினுர்கள். வெகு நேரத்திற்குப் பிறகு

தொலைந்துபோன பென்சில் கண்டெடுக்கப்பட்டது. காந்தியார் பெருமகிழ்ச்சி அடைந்தார்.

எந்தப் பொருளையும் அற்பமென வீணாக்கக் கூடாது என்பது காந்தியாரின் கருத்து. சிறு பென்சிலையும் அவர் கடைசிவரை பயன்படுத்தினார். அவரைப் போலவே மாணவர்களும் காகிதங்களையும் பென்சில்களையும் பாழாக்காமல் பயன்படுத்த வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| தேடு | வீரமக்கள் | எதிரி | அன்பு |
| கற்பி | எளிய | முறை | வீணாக்கு |
| அற்பம் | சேமித்து | மறுத்து | குறிப்பு |
| தொலைந்து | கொணர்ந்து | கடைசி | பாழாக்கு |
| கண்டெடு | பெருமகிழ்ச்சி | விடுதலை | மூலைமுடுக்கு |
| மகாத்மா | கேள்விப்படு | பயன்படுத்து | |

## பயிற்சி

1. காந்தியை நாம் ஏன் 'நாட்டுத் தந்தை' என்கிறோம்?

2. காந்தி எந்தப் பொருளையும் வீணாக்கமாட்டார் என்பதற்கு ஓர் உதாரணம் கொடு.

3. **கோடிட்ட இடங்களில் தக்க சொற்களைச் சேர்த்துப் படி :**

(அ) நாம் எதிரிகளிடத்தும் —— இருக்க வேண்டும்.

(ஆ) நாம் எந்தப் பொருளையும் —— கூடாது.

**எதிரான சொற்களை எழுது :**

அற்பம், எளிய, கடைசி.

# 16. பேராசையால் விளைந்த கேடு

## படப் பயிற்சி

பின்வரும் படங்களைப் பார்த்துக் கதை சொல்லு :




குறிப்பு :—1. நாய் எலும்பைக் கௌவிச் செல்லுதல். 2. வாய்க்காலை மரப்பாலத்தின் வழியாகக் கடத்தல். 3. தன் நிழலை நீரில் பார்த்தல். 4. வேறொரு நாய் எலும்பைக் கௌவிச் செல்வதாக நினைத்தல். 5. அந்த எலும்பையும் அடைய ஆசை கொள்ளுதல். 6. வாயிலிருந்த எலும்பையும் இழத்தல்.



# 17. விளையாட்டும் உடல் நலமும்

**கோபு :** முருகா ! மாலை மணி ஐந்தாகி விட்டது. எங்கள் பள்ளி விளையாட்டு மைதானத்திற்குப் போகலாம், வா.

**முருகன் :** இதோ வந்துவிட்டேன். நாம் அங்கே சிறிது நேரம் விளையாடுவோமா?

**கோபு :** ஓ, விளையாடலாம். என் நண்பர் சிலர் வந்திருப்பார்கள். எல்லோரும் சேர்ந்து விளையாடுவோம்.

**முருகன் :** உங்கள் விளையாட்டு மைதானம் பெரிதாயிருக்கிறதா ?

3818—4

**கோபு :** மிகப் பெரிது. எவ்வளவு இடம் வேண்டுமானாலும் இருக்கிறது.

**முருகன் :** எங்கள் பள்ளிக்கு அவ்வளவு இடம் இல்லை. நீங்கள் மாலையில் என்ன விளையாட்டுகள் ஆடுகிறீர்கள்?

**கோபு :** ஆசிரியர் எங்களை மைதானத்திற்கு அழைத்துச் செல்வார். பிறகு சிறிது நேரம் உடற் பயிற்சி செய்வோம். எல்லோரும் வரிசையாக நின்றுகொள்வோம். ஆசிரியர் தரும் உத்தரவுகளுக்குத் தக்கபடி கை கால்களை நீட்டி, மடக்குவோம். பிறகு சிறு சிறு கூட்டமாகப் பிரிந்து, கண்ணும்பூச்சி, ஓடிப் பிடித்தல், தாவிக் குதித்தல், பந்து எறிதல் முதலிய ஆட்டங்களை ஆடுவோம்.

**முருகன் :** வேறு என்ன விளையாடுகிறீர்கள்?

**கோபு :** எங்கள் மைதானத்தில் சருக்குப் பலகை இருக்கிறது. அதில் ஒருவர் பின் ஒருவராகச் சருக்குவோம். அது மிகவும் வேடிக்கையாக இருக்கும். இன்னும் துலாப் பலகை இருக்கிறது. அதன் முனைகளில் இருவர் உட்கார்ந்து கொண்டு விசையாக மேலுங்

கீழும் செல்வது எவ்வளவு உற்சாகமாக இருக்கும் தெரியுமா?

**முருகன் :** எங்கள் பள்ளியில் விளையாடுவதற்கு இவ்வளவு வசதிகள் இல்லையே!

**கோபு :** வசதிகள் இல்லாவிட்டாலும், மாலையில் ஒரு மணி நேரமாவது ஏதேனும் உடற் பயிற்சி செய்ய வேண்டும். அப்பொழுது தான் நம் உடம்பு வலிமை பெறும்.

**முருகன் :** நான் நாள்தோறும் மாலையில் விளையாடாமல் இருப்பதில்லை.

| | | | |
|---|---|---|---|
| மைதானம் | வரிசை | தாவி | முனை |
| எவ்வளவு | உத்தரவு | கண்ணும்பூச்சி | வசதி |
| அவ்வளவு | தக்கபடி | சருக்குப் பலகை | விசையாக |
| அழைத்து | மடக்கு | துலாப்பலகை | உற்சாகம் |
| உடற்பயிற்சி | நீட்டு | வேடிக்கை | |

**பயிற்சி**

1. நீ உன் பள்ளியில் என்ன விளையாட்டுகளில் சேர்கிறாய்?

2. உடற் பயிற்சி செய்வதன் அவசியம் என்ன?

3. எவ்வளவு, அவ்வளவு, இவ்வளவு—இந்தச் சொற்களை வாக்கியங்களில் உபயோகி.

4. **தெரிந்துகொள் :** மடக்கு × நீட்டு. பெரிது × சிறிது. இவை எதிரான பொருளுடைய சொற்கள். இவற்றை வாக்கியத்தில் உபயோகிக்கத் தெரிந்துகொள்.

# 18. கோழி

## சேவல்

1. கோழீ கோழீ வா வா
கொக்கோ கோ என்று வா !
கோழீ ஓடி வா வா
கொண்டைப் பூவைக் காட்டுவா !

2. காலை கூவி எங்களைக்
கட்டில் விட்டெழுப்புவாய்
வேலை செய்ய ஏவுவாய்
வெற்றி கொண்ட கோழியே !

## பெட்டை

3. கோழீ கோழீ வா வா
கூரை விட்டிறங்கி வா !
கோழீ முட்டை இடவா
கூட்டில் அடை காக்க வா !

4. பெட்டைக் கோழீ வா வா
பிள்ளைகளைக் கூட்டி வா !
குட்டை நெல்லைக் கொட்டினேன்
கொத்திக் கொத்தித் தின்னவா !

—தேசிக விநாயகம் பிள்ளை



## 19. பிறரை ஏமாற்ருதே

ஒரு காலத்தில் ஒரு கொக்கும் நரியும் நட்பாயிருந்தன. நரி அடிக்கடி கொக்கை ஏமாற்றும்; ஆனால் கொக்கு அதை எல்லாம் விளையாட்டென்று எண்ணி மறந்து விடும்.

ஒரு நாள் நரி கொக்கைப் பார்த்து, "நாளை என் பிறந்தநாள். நீ என் வீட்டுக்கு விருந்துண்ண வரவேண்டும்," என்று கூறியது. கொக்கு, நரியின் அழைப்பை ஏற்றுக் கொண்டது.

மறுநாள் கொக்கு தான் வாக்களித்த படியே நரியின் இருப்பிடத்துக்குச் சென்றது. நரி மகிழ்ச்சியுடன் நண்பனை வரவேற்றது. பிறகு கொக்கின் எதிரே, ஒரு வாயகன்ற

கிண்ணத்தை வைத்து, அதில் பாலை ஊற்றியது. பிறகு நரி, "நண்பரே, இந்தப் பால் இனிமை மிக்கது. இதை இருவரும் குடிக்கலாம்," என்றது.

கொக்கு தன் நீண்ட அலகினால் கிண்ணத்திலுள்ள பாலை எடுக்க முடியவில்லை. ஆனால், சிறிது நேரத்துக்குள் நரி அதிலிருந்த பாலை எல்லாம் நக்கிக் குடித்து விட்டது.

நரி தன்னை ஏமாற்றியதைக் கண்ட கொக்கு சினங்கொண்டது. ஆனால், அது தன் சினத்தை வெளிக்காட்டாமல், "நண்பா! இன்று உன் விருந்துணவு சிறப்பாயிருந்தது. நாளை நான் உனக்கு விருந்தளிக்க எண்ணுகிறேன். நீ தவறாமல் வரவேண்டும்," என்று கூறி நரியை அழைத்தது.

மறுநாள் நரி கொக்கின் இருப்பிடத்துக்குச் சென்றது. கொக்கு, வாய் குறுகிய ஓர் உயர்ந்த சாடியில் சில மீன்களைப் போட்டது. அதை நரியின் முன் வைத்து, "நண்பரே, இதில் சுவையான மீன்கள் உள்ளன. இருவரும் உண்ணலாம்," என்றது.

உயரமான சாடியினுள் தன் நீண்ட அலகைச் செலுத்தி, கொக்கு மீன்களை

எடுத்து விழுங்கியது. நரிக்கு அந்த சாடி யினுள் தலையை நுழைக்க முடியவில்லை.



கொக்கு தன்னை ஏமாற்றியதை உணர்ந்த நரி, நாணமடைந்து ஓடிவிட்டது.

| | | | |
|---|---|---|---|
| நட்பாயிரு | இருப்பிடம் | சாடி | விழுங்கியது |
| ஏமாற்று | அகன்ற | சிறப்பு | நுழைக்க |
| விருந்துண் | மிக்கது | தவறுமல் | உணர்ந்த |
| ஏற்றுக்கொள் | இனிமை | குறுகிய | நாணம் |
| வாக்களி | வெளிக்காட்டு | சுவையான | |

பயிற்சி

1. நரி கொக்கை ஏன் விருந்துண்ண அழைத்தது?
2. கொக்கு ஏன் நரியின் வீட்டில் ஏமாறியது?
3. கொக்கு நரியை எப்படி ஏமாற்றியது?
4. **கோடிட்ட இடங்களில் சொற்களை அமைத்துப் பூர்த்திசெய்:**

(அ) கொக்கு நரியின் —— ஏற்றுக்கொண்டது.
(ஆ) வாய் குறுகிய சாடியில் —— வைத்தது.
(இ) நரி —— ஓடிவிட்டது.



## 20. பள்ளிக்கூடத் தோட்டம்

**ஆசிரியர்:** பிள்ளைகளே! இப்பொழுது நம் பள்ளிக்கூடத் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரலாம், வாருங்கள்.

**ரமணி:** ஐயா, இந்தப் பாத்தியில் கத்தரிச் செடிகள் பூத்திருக்கின்றன.

**கந்தன்:** இந்தச் செடியில் சில பிஞ்சுக் கத்தரிக் காய்கள் கூட இருக்கின்றன.

**ஆசிரியர்:** இன்னும் சில நாட்களில் இந்தப் பிஞ்சுகளெல்லாம் பருத்துவிடும்.

இங்கே, பந்தலில் புடலங் கொடிகளும் அவரைக் கொடிகளும் செழிப்பாக வளர்ந் திருப்பதைப் பாருங்கள்.

**பாலன் :** இந்தக் கொடியில் சுருண்ட கம்பிகள் இருக்கின்றனவே!

**ஆசிரியர் :** அவை பற்றுக் கம்பிகள் எனப்படும். புடலங்கொடி இந்தக்கம்பிகளின் உதவியால்தான் பந்தலில் ஏறிப் படர்கிறது.

**ரமணி :** இந்தப் பூ எவ்வளவு பெரி தாகவும் அழகாகவும் இருக்கிறது!

**ஆசிரியர் :** அது சூரிய காந்தி; இது ரோசா. இதோ இந்தப் பூச்சியைப் பாருங்கள். மலரில் வந்து உட்காருகிறது.

**கந்தன் :** இந்தப் பூச்சியே ஒரு பூவைப் போல் இருக்கிறதே!

**ஆசிரியர் :** இது வண்ணாத்திப் பூச்சி. இதன் இறக்கைகளில் பலநிறச் செதில்கள் இருக்கின்றன. ஆகையால் அது அழகா யிருக்கிறது.

**பாலன் :** இது மலரில் ஏன் உட்கார்ந் திருக்கிறது?

**ஆசிரியர் :** மலரில் இனிப்பான தேன் சிறிது உண்டு. அதுதான் இந்தப் பூச்சியின்

உணவு. இது தேனைக் குடிப்பதற்காக ஒவ்வொரு மலரிலும் உட்காரும். அப்படி உட்காருவதால் விதைகள் உண்டாக இது உதவி செய்கிறது.

**ரமணி:** ஐயா, எங்களை நாள்தோறும் தோட்டத்துக்கு அழைத்து வாருங்கள். இந்த மலர்களையும் பூச்சிகளையும் பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல் தோன்றுகிறது.

| | | |
|---|---|---|
| பாத்தி | பந்தல் | செதில் |
| பூத்திரு | சுருண்ட | போல் |
| பிஞ்சு | கம்பி | தோன்றுகிறது |
| சுற்றிப்பார் | சூரியகாந்தி | வண்ணாத்திப் பூச்சி |

## பயிற்சி

1. உங்கள் பள்ளித் தோட்டத்தில் என்ன காய்கறிச் செடிகளும் பூச்செடிகளும் இருக்கின்றன?
2. புடலங்கொடி எப்படிப் பந்தலில் ஏறுகிறது?
3. வண்ணாத்திப்பூச்சி மலரில் ஏன் உட்காருகிறது?
4. வண்ணாத்திப்பூச்சி மலரில் உட்காருவதால் என்ன உண்டாகிறது?
5. பொருத்தமாகச் சேர்த்துப் படி:

| | |
|---|---|
| காய்கறிச் செடி | இலுப்பை |
| பூச்செடி | புடல் |
| காய்கறிக் கொடி | கத்தரி |
| மரம் | ரோசா |

6. உனக்குத் தெரிந்த காய்கள், பூக்கள், பழங்கள்— வகைக்கு ஐந்து எழுது.

146523



## 21. காகம் பாம்பைக் கொன்ற கதை

ஓர் ஊருக்கு வெளியே ஒரு பெரிய மரம் இருந்தது. அதன் கிளை ஒன்றில் இரண்டு காகங்கள் கூடு கட்டிக் கொண்டிருந்தன. பெட்டைக் காகம் கூட்டில் முட்டையிட்டது. பகலில் அவை இரை தேட ஊருக்குள் சென்று, மாலையில் திரும்புவது வழக்கம்.

அந்த மரத்தின் கீழ் ஒரு புற்று இருந்தது. அதில் ஒரு நல்ல பாம்பு வாழ்ந்தது. ஒரு நாள் காகங்கள் இரை தேடச் சென்ற பிறகு அது மரத்தின் மீது

ஏறியது. கூட்டிலிருந்த முட்டைகளை அது குடித்து விட்டது.

பாம்பு மரத்திலிருந்து இறங்கியது. அப்பொழுது காகங்கள் திரும்பி வந்து அதைப் பார்த்துவிட்டன. கூட்டிலிருந்த முட்டைகள் உடைந்து கிடந்ததைக் கண்டன.

மறு நாள் பெட்டைக் காகம் வருத்தத்துடன் மரக்கிளையில் உட்கார்ந்திருந்தது. பாம்பைக் கொல்வதற்கு வழி என்ன என்று அதற்குத் தெரியவில்லை.

அவ்வழியே ஒரு நரி வந்தது. காகம் தன் துயரத்தை அதனிடம் சொல்லியது. நரி, "இதற்குத்தானா வருந்துகிறாய்! அரண்மனைக் குளத்தில் இளவரசி நாள்தோறும் நீராடச் செல்கிறாள். அவள் தன் வைர மாலையைக் கழற்றிக் கரையில் வைப்பாள். நீ அதை எடுத்து வந்து, பாம்புப் புற்றில் போடு. நடப்பதைப் பார்," என்று ஆலோசனை கூறியது.

நரி கூறியபடியே காகம் செய்தது. காகம் வைர மாலையை எடுத்ததைப் பார்த்த இரண்டு ஏவலாளர், அதைத் துரத்திக் கொண்டே மரத்தினடிக்கு வந்தனர். அவர்கள்

பாம்புப் புற்றை உடைத்தார்கள். பாம்பு சீறிக்கொண்டு வெளியே வந்தது. ஏவலாளர் அதை வாளால் வெட்டிக் கொன்றனர். பிறகு வைரமாலையை எடுத்துச் சென்றனர்.

எதிரி ஒழிந்த பிறகு காகங்கள் கவலை இல்லாமல் நெடுங்காலம் வாழ்ந்தன.

| | | | |
|---|---|---|---|
| இரை | எதிரி | கவலை | ஏவலாளர் |
| துயரம் | நீராட | நடப்பது | வைரமாலை |
| கழற்று | உடைந்து | தெரியவில்லை | நெடுங்காலம் |
| இளவரசி | வருந்து | அரண்மனை | |

## பயிற்சி

1. காகங்கள் எங்கே கூடு கட்டிக்கொண்டு வாழ்ந்தன ?
2. காகத்தின் முட்டைகளைப் பாம்பு எப்பொழுது குடித்தது ?
3. காகத்திற்கு நரி என்ன ஆலோசனை கூறியது ?
4. பாம்பை யார் கொன்றார்கள் ?
5. பின் வரும் பிராணிகளில் பகையாயுள்ள இரண்டு இரண்டு பிராணிகளாகச் சேர்த்துக் கூறு :

   பூனை, பாம்பு, ஆடு, கீரி, எலி, ஓநாய்.
6. சரியாக உச்சரிக்கப் பழகு :

   இரை, இறை; ஒலி, ஒளி, ஒழி; இரக்கம், இறக்கம்; பாலம், பாளம்.



## 22. கந்தன் வளர்த்த வாத்து

கந்தன் வளர்த்த வாத்தொன்று,
இட்டது தினமும் பொன் முட்டை
அந்த முட்டைகள் அனைத்தையும்
அடைய ஆசைப் பட்டானே.
கத்தி ஒன்றால் குத்தியே,
வாத்தின் வயிற்றைக் கிழித்தானே !
ஐயோ ! ஒரே ஒரு முட்டை
அவனும் கண்டு அழுதானே !
அதிக ஆசைப் பட்டாலே,
அடைவோம் நாமும் நட்டமே !



# 23. ஔவையார் நெல்லிக்கனி பெற்றது

ஔவையார் எழுதிய ஆத்திசூடி முதலிய பாடல்களை நீங்கள் படித்து வருகிறீர்கள். அவர் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டில் வாழ்ந்திருந்தார். அவர் காலத்தில் இருந்த அரசர்களும் வள்ளல்களும் அவரைப் பெரிதும் மதித்துப் போற்றினர்கள்.

தகடூரைத் தலைநகராகக் கொண்டு அதைச் சேர்ந்த சிறு நிலப் பகுதியை அதியமான் என்ற சிற்றரசன் ஆட்சி செய்து

வந்தான். அவன் ஒரு வள்ளல். புலவர்களை ஆதரித்து அவர்களுக்குப் பெரும் பரிசில்களை வழங்கி வந்தான்.

ஒரு சமயம் ஔவையார் அதியமானைக் காண எண்ணித் தகடூரை அடைந்தார். அதியமான் அவரை மகிழ்ச்சியுடன் வரவேற்றுப் பல நாட்கள் அங்கே தங்கியிருக்குமாறு கேட்டுக் கொண்டான் ; அவருக்கு வேண்டிய வசதிகளைச் செய்வித்தான். அவர் பாடிய பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தான்.

தகடூருக்கு அருகேயிருந்த ஒரு மலைப் பிளவில் ஒரு கருநெல்லி மரம் இருந்தது. அதன் கனியை உண்டவர்கள் நெடுங்காலம் வாழ்ந்திருப்பர். அதைப் பற்றி அதியமான் கேள்வியுற்றான். அவன் ஒரு நாள் அந்த மலை வழியே வரும்பொழுது அம்மரத்தில் ஒரு கனி இருப்பதைக் கண்டான். கல்லும் முள்ளும் நிறைந்த பாதை வழியே சென்று, அம்மரத்தில் ஏறிக் கருநெல்லிக் கனியைப் பறித்தான்.

அந்தக் கனியைப் பறிக்கும் பொழுது அதியமானுக்கு ஔவையாரின் நினைவு வந்தது. அதை ஔவையார் புசித்தால்,

அவர் நெடுங்காலம் வாழ்ந்து, பல தமிழ் நூல்களை இயற்றுவார்; அதனால் தமிழ் மக்கள் எல்லோருக்கும் நன்மை விளையும் என்று எண்ணினான்.

அதியமான் தன் பரிவாரங்கள் சூழ ஔவையாரிடம் சென்றான். கருநெல்லிக் கனியை ஒரு தட்டில் வைத்து, அதை ஔவையாரிடம் கொடுத்தான். அம்மூதாட்டி அதை எடுத்து உண்டார். பிறகுதான் அதியமான் அக்கனியின் சிறப்பான குணத்தை எடுத்துரைத்தான்.

அதியமானின் அருங்குணத்தைக் கண்டு ஔவையார் வியந்தார். அவனுக்குத் தமிழ் மொழியினிடத்தும் தமிழ் மக்களிடத்தும் இருந்த அன்பைப் பாராட்டி ஒரு செய்யுள் இயற்றினார்.

| | | | |
|---|---|---|---|
| வள்ளல் | கனி | சூழ | மூதாட்டி |
| மதித்து | முள் | புசி | பாராட்டு |
| போற்று | அருகே | நன்மை | எடுத்துரை |
| தலைநகர் | கருநெல்லி | விளையும் | அருங்குணம் |
| சிற்றரசன் | நிலப்பகுதி | பரிவாரங்கள் | |

### பயிற்சி

1. அதியமான் எந்த நிலப்பகுதியை ஆண்டான் ?

2. ஔவையார் எப்பொழுது வாழ்ந்திருந்தார் ?

3. கரு நெல்லிக் கனியின் குணம் என்ன ?

4. அதியமான் கருநெல்லிக்கனியை ஔவையாருக்கு ஏன் கொடுத்தான் ?

5. **தெரிந்து கொள் :**

**எதிர்மொழிகள் :—**

சிற்றரசன் × பேரரசன்.

நன்மை × தீமை.

6. **வள்ளல்** = யார் எதுகேட்டாலும் இல்லை என்னுமல் கொடுப்பவன். **பரிவாரங்கள்** = அரசருடன் சூழ்ந்து வரும் காவலர் முதலியோர். **மூதாட்டி** = வயதிலும் அறிவிலும் முதிர்ந்தவள்.

கோடிட்ட இடங்களில் இந்த மூன்று சொற்களையும் பொருத்தமாகச் சேர்த்துப் படி :—

(அ) அதியமான் ஒரு ———.

(ஆ) ——— சூழ, அதியமான் சென்றுன்.

(இ) ஔவையார் ஒரு ———.




## 24. மளிகைக் கடை

**வேலன் :** அப்பா, உங்களுடன் நானும் கடைக்கு வருகிறேன்.

**தந்தை :** சரி, போகலாம். இந்தப் பைகளை எடுத்துக் கொண்டு வா.

**வேலன் :** இதோ எடுத்துக் கொண்டேன். அப்பா, நீங்கள் என்ன என்ன சாமான்கள் வாங்கப் போகிறீர்கள்?

**தந்தை :** துவரம் பருப்பு, கடலைப் பருப்பு, வெல்லம், சர்க்கரை, காப்பிக் கொட்டை எல்லாம் வாங்கிவர வேண்டும்.

**வேலன் :** இவை எல்லாம் எந்தக் கடையில் கிடைக்கும்?

**தந்தை :** இதோ பார், மளிகைக் கடையை. இதில்தான் நாம் வாங்க வேண்டிய சாமான்கள் கிடைக்கும். இந்தச் சீட்டைக் கடைக்காரரிடம் கொடு.

**வேலன் :** கடைக்காரர் துவரம் பருப்பை ஒரு பாத்திரத்தில் போடுகிருரே, ஏன்?

**தந்தை :** அந்தப் பாத்திரத்துக்கு ஒரு படி என்று பெயர். பருப்பு, அரிசி, உப்பு முதலிய சாமான்களைப் படியால்தான் அளந்து கொடுப்பார். இரண்டு படி துவரம் பருப்பை ஒரு பையிலும் ஒரு படி கடலைப் பருப்பை மற்ருெரு பையிலும் போட்டு வாங்கு.

**வேலன் :** போட்டாயிற்று. சர்க்கரையை ஏன் அப்பா, படியால் அளக்கவில்லை?

**தந்தை :** சர்க்கரையைத் தராசில் நிறுத்துத்தான் கொடுப்பார். அதோ இருப்பது தான் தராசு. ஒரு தட்டில் எடைகளை வைத்து மற்ருெரு தட்டில் சர்க்கரையைப் போடுகிருர் பார். தட்டில் இருப்பது ஒரு வீசை எடை. அரை வீசை, கால் வீசை முதலிய எடைகளும்

உண்டு. வெல்லமும் காப்பிக்கொட்டையும் இப்படியே நிறுத்துத்தான் கொடுப்பார்.

**வேலன் :** அப்பா, அடுத்த தடவை நானே வந்து சாமான் வாங்குகிறேன்.

**தந்தை :** அப்படியே செய்யலாம். இந்தப் பணத்தைக் கடைக்காரரிடம் கொடுத்து மீதியை வாங்கு.

**கடைக்காரர் :** வேலா, சாமான்களின் விலை எட்டு ரூபாய் போக மீதி இரண்டு ரூபாயை வாங்கிக்கொள். உனக்குத் தின்பதற்கு இந்தக் கற்கண்டையும் எடுத்துக்கொள்.

| | | |
|---|---|---|
| மளிகை | படி | கால் |
| வெல்லம் | தராசு | மீதி |
| பாத்திரம் | நிறுத்து | பணம் |
| போடு | எடை | விலை |
| அளந்து | வீசை | முக்கால் |
| காப்பிக்கொட்டை | அரை | கற்கண்டு |
| துவரம் பருப்பு | மற்றொரு | |

### பயிற்சி

1. தராசில் நிறுத்து வாங்கும் சாமான்களில் மூன்றும், படியால் அளந்து வாங்கும் சாமான்களில் மூன்றும் சொல்லு.

2. **கோடிட்ட இடங்களில் தக்க சொற்களைச் சேர்த்துப் படி :**

(அ) சில சாமான்களைத் தராசில் ——.
(ஆ) எண்ணெயைப் படியால் ——.
(இ) கடையில் வாங்கும் சாமானுக்கு —— கொடுக்க வேண்டும்.



## 25. உண்மையால் விளைந்த நன்மை

ஓர் ஊரில் ஏழை விறகு வெட்டி ஒருவன் இருந்தான். ஒரு நாள் அவன் காட்டுக்குச் சென்று ஒரு மரத்தைக் கோடரியால் வெட்டிக் கொண்டிருந்தான். அந்த மரம் ஒரு குளக் கரையில் இருந்தது.

விறகு வெட்டி, ஒரு மரக் கிளையைப் பாதி வெட்டிக் கொண்டிருந்தபொழுது, கை தவறி யதால், கோடரி குளத்தில் விழுந்துவிட்டது. அவனுக்கு நீந்தத் தெரியாது. கோடரியை வெளியே எடுக்க வழி தெரியாமல் அவன் வருந்தினன்.

அவனுடைய நிலையைக் கண்ட ஒரு வன தேவதை இரக்கம் கொண்டது. உடனே அது அவன் எதிரே தோன்றி, "நீ வருந்த வேண்டாம். நான் கோடரியை எடுத்துத் தருகிறேன்," என்று கூறியது. உடனே அது நீரில் மூழ்கிவிட்டுச் சிறிது நேரத்தில் வெளியே வந்தது. அதன் கையில் ஒரு தங்கக் கோடரி இருந்தது. "இது தானே உன் கோடரி?" என்று அவனிடம் வன தேவதை கேட்டது.

விறகு வெட்டி, "இது இல்லை," என்றான்.

வன தேவதை மற்றொரு தடவை நீரில் மூழ்கி எழுந்தது. அதன் கையில் ஒரு வெள்ளிக் கோடரி இருந்தது. விறகு வெட்டி அதுவும் தன்னுடையது இல்லை எனக் கூறினான்.

மூன்றும் தடவை நீரில் மூழ்கி எழுந்த வன தேவதை, அவனுடைய கோடரியையே எடுத்துக் காட்டியது. விறகு வெட்டி மகிழ்ச்சியுடன், "இது தான் என் கோடரி," என்று கையை நீட்டினான்.

உடனே வன தேவதை, "நீ உண்மை கூறியதற்கு நான் மகிழ்கிறேன். இந்த மூன்றையும் உனக்குத் தருகிறேன்,"

என்று சொல்லி, எல்லாக் கோடரிகளையும் அவனிடம் கொடுத்துவிட்டு மறைந்தது.

தங்கக் கோடரியையும் வெள்ளிக் கோடரியையும் பெற்ற விறகு வெட்டி, அவற்றை விற்றுப் பெருஞ் செல்வன் ஆனான். உண்மையே உயர்வளிக்கும் என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

| | | | |
|---|---|---|---|
| கோடரி | வனதேவதை | வெள்ளி | உயர்வு |
| கைதவறு | தோன்றி | பெற்ற | அளிக்கும் |
| நீந்த | தடவை | செல்வன் | உணர்ந்து |
| இரக்கம் | தங்கம் | | |

### பயிற்சி

1. கோடரி ஏன் குளத்தில் விழுந்தது ?

2. வன தேவதை விறகு வெட்டியினிடம் ஏன் இரக்கம் கொண்டது ?

3. வன தேவதை முதல் தடவையும் இரண்டாம் தடவையும் எந்தக் கோடரிகளை எடுத்துக் காட்டியது?

4. விறகு வெட்டிக்குத் தங்கக் கோடரியும் வெள்ளிக் கோடரியும் எதற்காகக் கொடுக்கப்பட்டது?

5. கோடிட்ட இடங்களில் தக்க சொற்களைச் சேர்த்துப் படி :—

(அ) வன தேவதை முதலில் —— கோடரியைக் காட்டியது.

(ஆ) விறகு வெட்டி —— கூறியதால் வன தேவதை மகிழ்ச்சி யடைந்தது.

# 26. பூனைக்கு மணி கட்டுவது யார்?

## படப் பயிற்சி

ஒவ்வொரு படத்தையும் வரிசையாகப் பார்த்து ஒன்றிரண்டு வாக்கியங்கள் எழுது. பிறகு 'பூனைக்கு மணி கட்டுவது யார்?' என்ற கதையைச் சொல்லு.



## 27. மழைப் பாட்டு

மழையே மழையே வா வா!
    மனங் குளிர ஓடி வா!

வானத் திலிருந்து வா வா!
    வாடிய செடிமேல் ஓடி வா!

மலையின் மேலே ஏறி வா!
    மடுவில் சேர ஓடி வா!

காயும் பழமும் உன்னாலே,
    கருப்பு நீங்குவதும் உன்னாலே!

உழவும் விதைப்பும் உன்னாலே,
    உண்டு வாழ்வதும் உன்னாலே!

விளைவும் அறுப்பும் உன்னாலே,
    விலங்கினம் வாழ்வதும் உன்னாலே!

# 28. நெற் பயிர்

**கமலம் :** மாமா, நானும் உங்களுடன் வயலுக்கு வருகிறேன். வயலைச் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று பல நாட்களாக எண்ணிக் கொண்டிருந்தேன்.

**மாமன் :** இப்பொழுதே புறப்பட்டு வா, போய்ப் பார்க்கலாம். நம் வயலில் நெற் பயிர்கள் செழிப்பாக வளர்ந்துள்ளன.

**கமலம் :** நம் வயல் அதிக தூரத்தி லிருக்கிறதா ?

**மாமன் :** ஊருக்குப் பக்கத்தில்தான் இருக்கிறது. ஊர் எல்லையில் முதல் வயல் நம் முடையதுதான்.

**கமலம் :** வயலில் நெல்லைப் பயிர் செய் வது எப்படி, மாமா ?

**மாமன் :** மழைக் காலத்துக்கு முன்பே வயலைப் பல தடவை நன்ருக உழுது பண் படுத்தியிருக்க வேண்டும். மழைக் காலத்தில் நெல் விதைகளை வயலில் விதைக்க வேண்டும். அல்லது நாற்றுக்களை உண்டாக்கி, அவற்றை வயலில் நடவேண்டும். ஏரியில் தண்ணீர்

நிரம்பும். அந்த நீரை நெற் பயிருக்குப் பாய்ச்சிவர வேண்டும். இதோ நம் வயல்



வந்து விட்டது. பயிர்கள் பச்சைப் பசே லென்று இருப்பதைப் பார்.

**கமலம்:** மாமா, எல்லா வயல்களிலும் நெற் பயிராகவே இருக்கிறதே!

**மாமன்:** ஆம். மழைக் காலத்தில் எல்லா வயல்களிலும் நெல்தான் பயிராகும். இந்தப் பயிர்கள் இப்பொழுதுதான் கதிர் பிடிக்கத் தொடங்கியிருக்கின்றன.

**கமலம்:** பக்கத்து வயலில் பயிர் சிறிது மஞ்சளாகத் தெரிகிறதே!

**மாமன்:** அந்த வயலில் சில நாட்கள் முன்னதாகவே நெல் விதைத்து விட்டார்கள். அந்தப் பயிர்களில் இப்பொழுது கதிர் முற்றத் தொடங்கியுள்ளன. இன்னும் சில நாட்களில் கதிரிலுள்ள நெல்மணிகள் நன்ருக முதிர்ந்துவிடும். பயிர்கள் தலைசாய்ந்துவிடும்.

**கமலம்:** பிறகு என்ன செய்வார்கள்?

**மாமன்:** கதிர்கள் சாய்ந்துவிட்டால், பயிர்களை அறுவடை செய்வார்கள். பிறகு அவைகளைக் களத்திற்கு எடுத்துச் சென்று நெல் வேறு வைக்கோல் வேருகப் பிரிப்பார்கள். நெல்லைக் கோணிப்பைகளில் கட்டி வீட்டுக்கு எடுத்துச் செல்வார்கள்.

**கமலம்:** மாமா, ஒரு நெற் பயிரை மட்டும் நான் பிடுங்கி எடுத்துக் கொள்கி

றேன். என் ஆசிரியர் வெவ்வேறு பயிர்களைச் சேகரிக்கச் சொல்லியிருக்கிருர்.

**மாமன் :** அதற்கென்ன, எடுத்துக் கொள்.

| | | | |
|---|---|---|---|
| எல்லை | விதை | முற்ற | பிரி |
| நாற்று | பாய்ச்சி | நெல்மணி | களம் |
| புறப்படு | கதிர்பிடிக்க | முதிர்ந்து | பிடுங்கி |
| செழிப்பாக | முன்னதாக | தலைசாய் | வைக்கோல் |
| பண்படுத்தி | பச்சைப்பசேல் | அறுவடை | கோணிப்பை |

### பயிற்சி

1. மழைக் காலத்துக்குமுன் வயலை என்ன செய்ய வேண்டும்?

2. நெற்பயிருக்கு எங்கிருந்து நீர் பாய்ச்சலாம்?

3. நெற்பயிர் முதிரும்பொழுது நிறம் எப்படி மாறும்?

4. நெல் கதிர்கள் முற்றின பிறகு என்ன செய்வார்கள்?

5. தெரிந்து கொள்: பண்படுத்தி - பக்குவம் செய்து. களம் - இடம்; நாற்று - இளஞ்செடி.

6. பச்சைப்பசேல் — இதைப்போல் நிறத்தைக் காட்டக்கூடிய சொல் தொடர்கள் வேறு இரண்டு சொல்.



## 29. நியூட்டனின் பொறுமை

நியூட்டன் என்ற ஒரு பெரியார் இருந்தார். அவர் சிறந்த அறிவாளி. எப்பொழுதும் எதையாவது ஆலோசனை செய்து கொண்டே இருப்பார். சூரியன், சந்திரன் முதலியவை வானத்தில் ஏன் சுற்றிச் சுற்றி வருகின்றன என்றெல்லாம் எண்ணிப் பார்த்தார். அதன் காரணங்களையும் அவர் கண்டுபிடித்தார்.

நியூட்டனிடம் ஒரு நாய் இருந்தது. அதை அவர் அன்புடன் வளர்த்தார். அது நியூட்டனின் படிப்பறைக்குள் தாராளமாகச் செல்லும்; மேசை மீது ஏறும்; நாற்காலி மீது உட்காரும்; குதித்து விளையாடும்.

நியூட்டன் பல ஆண்டுக் காலம் உழைத்துக் கண்டுபிடித்த உண்மைகளை ஒரு புத்தகமாக எழுதினார். ஒரு நாள் அந்தப் புத்தகத்தை மேசையின் மேல் வைத்தார். அதன் பக்கத்தில் மெழுகுவத்தி ஒன்று எரிந்து கொண்டிருந்தது. அவர் வேறு ஒரு வேலையாகச் சற்று நேரம் வெளியே சென்றார்.

அப்பொழுது அவரது நாய் அந்த அறைக்குள் வந்தது. மேசையின் மேல் குதித்து ஏறியது. எரிந்துகொண்டிருந்த மெழுகுவத்தி சாய்ந்தது. புத்தகம் தீப்பற்றி எரிந்தது.

நியூட்டன் திரும்பி வந்தார். புத்தகம் எரிந்துபோனதைக் கண்டார். அது தம் நாயின் செயல் என்பதை அறிந்தார்.

அவர் நாயின்மீது சினங்கொள்ளவில்லை. தம் உழைப்பெல்லாம் வீணானதற்கு வருந்தினார். நாயைத் தட்டிக் கொடுத்து, "அந்தப் புத்தகத்தின் மதிப்பை நீ சிறிதும் அறியவில்லையே!" என்று மட்டும் கூறினார்.

மறுபடியும் நெடுங்காலம் உழைத்து அப்புத்தகத்தை நியூட்டன் மற்றொரு முறை

எழுதி முடித்தார். நியூட்டனின் பொறுமையை எண்ணிப் பாருங்கள்!

| | | | |
|---|---|---|---|
| சிறந்த | அறிவாளி | சற்று | மட்டும் |
| பொறுமை | காரணம் | உழைப்பு | மதிப்பு |
| பெரியார் | படிப்பறை | மெழுகுவத்தி | வீணனது |
| உழைத்து | தாராளமாக | | |

**பயிற்சி**

1. நியூட்டன் எப்பொழுதும் என்ன செய்து கொண்டிருப்பார்?

2. நியூட்டன், தாம் எழுதிய புத்தகத்தை எங்கே வைத்தார்? பக்கத்தில் என்ன இருந்தது?

3. புத்தகம் ஏன் எரிந்து போயிற்று?

4. புத்தகம் எரிந்ததைப் பார்த்த நியூட்டன் என்ன செய்தார்?

5. நியூட்டன் பொறுமையுள்ளவர் என்பது எப்படித் தெரிகிறது?

6. பின்வரும் சொற்களைத் தக்கபடி மாற்றி, கோடிட்ட இடங்களை நிரப்பு:

(அ) சூரியனும் சந்திரனும் —— சுற்றிச் சுற்றி வருகின்றன. (வானம்)

(ஆ) நியூட்டன் ஒரு நாயை அன்புடன் ——. (வளர்)

(இ) நியூட்டன் தாம் கண்டுபிடித்தவற்றை ஒரு புத்தகமாக ——. (எழுது)

7. **எதிர்ச்சொற்களைத் தெரிந்துகொள்:**

பொறுமை × பொறுமை

பெரியார் × சிறியார்

வீணனது × வீணாகவில்லை




# 30. தெனாலிராமன்

தெனாலி என்ற ஊரில் இராமன் என்ற ஒருவன் இருந்தான். அவன் கூரிய அறிவுள்ளவன். அவன் ஒரு சமயம் சில திருடர்களையே ஏமாற்றிவிட்டான்.

ஒரு நாள் இரவில், தெனாலிராமனுடைய வீட்டில் திருடுவதற்காக மூன்று திருடர்கள் வந்தார்கள். அவர்கள் கொல்லைப்புறச் சுவர் அருகே நின்றுகொண்டு, வீட்டுக்குள் எப்படி நுழைவது என்பதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

வீட்டினுள் இருந்த தெனாலிராமனுக்குக் கொல்லையில் திருடர்கள் வந்திருப்பது தெரிந்துவிட்டது. உடனே அவன் தன் மனைவியை எழுப்பி, "ஊரில் திருடர் பயம் அதிகமிருக்கிறது. நாம் நமது நகைப் பெட்டியைக் கொல்லைக் கிணற்றில் போட்டு விடுவோம்," என்று உரக்கச் சொன்னான். பிறகு ஒரு மரப்பெட்டியில் சில கற்களைப் போட்டு நிரப்பினான். அதை அவனும் மனைவியும் சேர்ந்து தூக்கிச் சென்று, கொல்லைக் கிணற்றில் போட்டுவிட்டுத் திரும்பினார்கள்.

திருடர்கள் கிணற்று நீரை எல்லாம் இறைத்துவிட்டுப் பெட்டியை வெளியே எடுக்கத் திட்டமிட்டனர். அங்கே ஓர் ஏற்றமரம் இருந்தது. இருவர் ஏற்று ஓடினர்; ஒருவன் சாலினால் நீரை வெளியே இறைத்துவிட்டான்.

வீட்டினுள் சென்ற தெனாலிராமன் திருடர்கள் அறியாமல் வெளியே வந்தான். அவர்கள் இறைத்த நீரைத் தன் தோட்டச் செடி கொடிகளுக்கெல்லாம் மடை மாறிப் பாய்ச்சினான். இப்டியாக இரவு கழிந்து விடியற்காலம் வந்தது. உடனே ராமன்

திருடர்களை நோக்கி, "ஓ ஆட்களே! என் தோட்டம் முழுதும் தண்ணீர் பாய்ந்து விட்டது. நீங்கள் இறைத்தது போதும்!" என்று உரக்கக் கூவினான்.

இதைக் கேட்ட திருடர்கள் வெட்கமும் திகிலும் அடைந்தனர்; ஏற்றத்தை விட்டு விட்டு ஒரே ஓட்டமாகச் சென்று மறைந்தனர். மறுநாள் இந்தச் செய்தியைக் கேட்ட ஊரார் வயிறு குலுங்கச் சிரித்தனர்.

| | | | |
|---|---|---|---|
| கூரிய | மனைவி | திகில் | சால் |
| கொல்லை | உரக்க | ஏற்று ஓடு | குலுங்க |
| எப்படி | நிரப்பு | மடைமாறு | வயிறு |
| நுழை | திட்டமிடு | விடியற்காலம் | |

### பயிற்சி

1. வீட்டுக் கொல்லையருகே நின்று கொண்டு திருடர்கள் என்ன பேசினார்கள்?

2. தெனாலிராமனும் மனைவியும் என்ன செய்தார்கள்?

3. இரவு முழுவதும் திருடர்கள் என்ன செய்தார்கள்? தெனாலிராமன் என்ன செய்தான்?

4. திருடர்கள் எப்பொழுது ஓடினார்கள்? ஏன் வெட்கமடைந்தார்கள்?

5. **பொருள் வேறுபாடு தெரிந்துகொள் :**

   கூரிய, கூறிய.

# 31. உலக நீதி

ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்.
ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்.
மாதாவை ஒருநாளும் மறக்கவேண்டாம்.
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்கவேண்டாம்.
போகாத இடந்தனிலே போகவேண்டாம்.
நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்.
நிலையில்லாக் காரியத்தை நிலை நிறுத்தவேண்டாம்.
நஞ்சுடனே ஒருநாளும் பழகவேண்டாம்.
நல்லிணக்கம் இல்லாரோடு இணங்கவேண்டாம்.
அஞ்சாமல் தனிவழியே போகவேண்டாம்.
அடுத்தவரை ஒருநாளும் கெடுக்கவேண்டாம்.
மனம்போன போக்கெல்லாம் போகவேண்டாம்.
மாற்றானை உறவென்று நம்பவேண்டாம்.
தனந்தேடி உண்ணாமல் புதைக்கவேண்டாம்.
தருமத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்.
சினந்தேடி அல்லலையும் தேடவேண்டாம்.
சினத்திருந்தார் வாசல்வழிச் சேரவேண்டாம்.
குற்றமொன்றும் பாராட்டித் திரியவேண்டாம்.
கொலைகளவு செய்வாரோடு இணங்கவேண்டாம்.
கற்றவரை ஒருநாளும் பழிக்கவேண்டாம்.
கோயில்இல்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்.
வெஞ்சமரில் புறங்கொடுத்து மீளவேண்டாம்.
தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்லவேண்டாம்.

மதியாதார் தலைவாசல் மிதிக்கவேண்டாம்.
மூத்தோர்சொல் வார்த்தைதனை மறக்கவேண்டாம்.
முன்கோபக் காரரோடு இணங்கவேண்டாம்.
வழிப்பறித்துத் திரிவாரோடு இணங்கவேண்டாம்.
கருதாமல் கருமங்கள் முடிக்கவேண்டாம்.
எளியாரை எதிரிட்டுக் கொள்ளவேண்டாம்.
சேராத இடந்தனிலே சேரவேண்டாம்.
செய்நன்றி ஒருநாளும் மறக்கவேண்டாம்.
ஊரோடுங் குண்டுணியாய்த் திரியவேண்டாம்.
உற்றாரை உதாசினங்கள் சொல்லவேண்டாம்.
மண்ணின்று மண்ணுரைம் சொல்ல வேண்டாம்.
காணாத வார்த்தையைக் கட்டுரைக்கவேண்டாம்.
புண்படவே வார்த்தைதனைச் சொல்லவேண்டாம்.
புறஞ்சொல்லித் திரிவாரோடு இணங்கவேண்டாம்.
மறம்பேசித் திரிவாரோடு இணங்கவேண்டாம்.
வாதாடி வழக்கழிவு சொல்லவேண்டாம்.
திறம்பேசிக் கலகமிட்டுத் திரியவேண்டாம்.
தெய்வத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்.
இறந்தாலும் பொய்தன்னைச் சொல்லவேண்டாம்.
கூறுக்கி ஒருகுடியைக் கெடுக்கவேண்டாம்.
துர்ச்சனராய்த் திரிவாரோடு இணங்கவேண்டாம்.
வீறான தெய்வத்தை இகழவேண்டாம்.
வெற்றியுள்ள பெரியோரை வெறுக்கவேண்டாம்.

# 32. கொன்றை வேந்தன்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஆலயந் தொழுவது சாலவும் நன்று.
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
ஏவா மக்கள் மூவா மருந்து.
ஐயம் புகினும் செய்வன செய்.
ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.
அஃகமும் காசும் சிக்கனத் தேடு.
கிட்டாதாயின் வெட்டென மற.
கீழோராயினும் தாழ உரை.
குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
கூர்அம்பாயினும் வீரியம் பேசேல்.
கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.
கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை.
சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு.
சீரைத் தேடின் ஏரைத் தேடு.
சூதும் வாதும் வேதனை செய்யும்.
சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
தந்தைசொல் மிக்க மந்திரமில்லை.
தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை.
திரைகடல் ஓடியுந் திரவியந் தேடு.

TB
031(27)
N58



தீராக் கோபம் போராய் முடியும்.
தேடாது அழிக்கின் பாடாய் முடியும்.
தையும் மாசியும் வையகத்து உறங்கு.
தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.
தோழனோடும் ஏழமை பேசேல்.
நல்லிணக்க மல்லது அல்லற் படுத்தும்.
நாடெங்கும் வாழக் கேடொன்றும் இல்லை.
நுண்ணிய கருமமும் எண்ணித் துணி.
நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு.
நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகம் இல்லை.
நைபவர் எனினும் நொய்ய உரையேல்.
நோன்பு என்பதுவே கொன்று தின்னாமை.
பாலோடு ஆயினும் காலம் அறிந்துண்.
புலையும் கொலையும் களவும் தவிர்.
பொல்லாங்கு என்பவை எல்லாம் தவிர்.
போனகம் என்பது தானுழந்து உண்டல்.
மருந்தே ஆயினும் விருந்தோடு உண்.
மாரி அல்லது காரியம் இல்லை.
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
மேழிச் செல்வம் கோழைபடாது.
வளவனாயினும் அளவறிந்து அழித்துண்.
ஊக்கமுடைமை ஆக்கத்திற்கு அழகு.
வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை.
ஓதாதார்க்கு இல்லை உணர்வொடு ஒழுக்கம்.

---

146523

9-6-64-6